**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI**

**OS. No.476/2016**

**PW – 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சரஸ்வதி | | : |
| **Husband Name** | : லேட்.பழனிச்சாமி | | : |
| **Village** | : | **Calling** | : |
| **Taluk** | : | **Age** | : /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of March 2026)**

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் வா.சா.1 சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் ஏற்கனவே வா.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். தற்போது எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை கூடுதல் சான்றாவணங்களாக தாக்கல் செய்கிறேன்.

1. சர்வே.எண். 55/2 காலையின் பட்டா எண். 103–ன் உண்மை நகல் – வா.சா.ஆ.16.

2. சர்வே.எண். 56/2 காலையின் பட்டா எண். 795–ன் உண்மை நகல் – வா.சா.ஆ.17.

3. சர்வே.எண். 55/6 காலையின் பட்டா எண். 684–ன் உண்மை நகல் – வா.சா.ஆ.18.

4. கே.பழனிசாமியின் இறப்பு சான்றிதழ் கணிணி நகல் வா.சா.ஆ.19.

5. கே.பழனிசாமியின் வாரிசு சான்றிதழ் கணிணி நகல் வா.சா.ஆ.20.

6. 06.07.2010 ம் தேதியில் பட்டா கேட்டு வட்டாட்சியருக்கு கொடுத்த மனுவின் நகல் – வா.சா.ஆ.21.

மேற்கண்ட சான்றாவணங்களை எனது தரப்பு கூடுதல் சான்றாவணங்களாக ஏற்றுக்கொண்டு தாவாவில் கோரிய படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

மேற்படி வீதம் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் யார் மனுக்கொடுத்து பட்டா வாங்கப்பட்டது என்றால் எனது கணவர் பழனிச்சாமி மனுக்கொடுத்துதான் பட்டா பெற்றார். அந்த பட்டாக்களை எனது கணவர் எந்த தேதியில் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. மேற்படி பட்டா எண்கள்.103, 684, 795 என்ற பட்டாக்கள் தற்போது அமுலில் இருந்து வருகிறதா என்றால் அந்த பட்டா எண்கள் தற்போது கணிணி பட்டாவில் வரவில்லை. மேற்படி பட்டா எண்களின் படி நாங்கள் சொத்தை அனுபவித்து வருகிறோம் என்பதற்கு கந்தாய வரி ஏதேனும் செலுத்தியுள்ளோமா என்றால் இல்லை. மேற்படி பட்டா எண்களின் தொடர்புடைய முந்தைய வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதனால் மேற்படி பட்டா எண்கள்.103, 684, 795 என்ற பட்டாக்களை இந்த வழக்கிற்காக வேண்டி தயார் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.10 17:37:28 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**